SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 11. TML1150 - தற்கால திரைப்படத்தில் பெண்கள் குழந்தைகள் மீதான வன்முறை பதிவுகள்

திருமதி க.மகாலட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி(துன்னாட்சி)
ஈரோடு–12.

## ஆய்வு சுருக்கம்

*திரைப்படம் தற்காலத்தில் அதிக முக்கியத்துவம் பெற்ற ஒரு கலை வடிவமாக விளங்கி வருகிறது. நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகளின் மொத்த உருவமாக இந்த வடிவம் காணப்படுகிறது. பாரம்பரியமாக மக்கள் மத்தியில் வழக்கில் இருந்து வருகின்ற கலை வடிவங்களான ஓவியம், நாடகம், சிற்பம், இன்னும் பல, என்பவற்றைக் காட்டிலும் வேறுபட்ட பல தனித்துவ அம்சங்களைக் கொண்டதாக இந்த கலை வடிவம் காணப்பட்டு வருகின்றது. தற்காலச் சூழலில் திரைப்படம் பார்ப்பது என்பது சமுதாயத்தின் இயல்பாகவும் ஒரு சமூக நடவடிக்கையாகவும் மாறிவிட்டது. இந்த சினிமாவை பார்க்கும் பொழுது அது நிழல் என்ற உண்மையை மனம் ரத்து செய்கிறது. வன்முறைக்கு பல முகங்கள் உண்டு ஒருவரை ஒருவர் வெட்டி சாய்ப்பது மட்டும்தான் வன்முறை என்பது இல்லை. நாம் காலம் காலமாக பாதுகாக்கும் உணர்வுகளை மழுங்கடிக்கச் செய்யும் எல்லா வெளிப்பாடுகளும் வன்முறை கொண்டவைதான். பெண்ணின் உணர்வுகளை மழுங்கடிப்பதே வன்முறை எனும் கருதும்போது அவள் உடல் ரீதியாக வஞ்சிக்கப்படுவதை அதிகாரத்தின் குவியலாக விளங்குகின்றது என்பதை இன்றைய திரைப்படங்கள் உணர்த்துகின்றன. பெண்ணின் மீது செலுத்தப்படும் பாலியல் வன்முறையை நியாயப்படுத்தும் திரைப்படங்கள் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி போன்ற சமுதாய கட்டமைப்பினையும் நியாயப்படுத்துகின்றன. ஆனால் தற்கால திரைப்படங்களான ஜெய் பீம், விடுதலை பாகம் ஒன்று –இரண்டு காலா, நெஞ்சுக்கு நீதி ஆகிய திரைப்படங்கள் உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு பெண்கள் மீதும், சிறுவர்கள் மீதும் நிகழ்த்தப்படும் வன்முறையை ஆவணமாக காட்சிப்படுத்தி உள்ளது. அதனை வெளிப்படுத்திக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## திறவுச்சொற்கள்

*வன்முறை, அடக்குமுறை, பாலியல் அத்துமீறல், ஒடுக்கப்பட்டவர்கள்,ஆணாதிக்கம்*

## தொடக்கமாக...

*சமூகத்தை பொருத்தவரை தவிர்க்கவே முடியாத ஒரு ஊடகமாக திகழும் தமிழ் சினிமா பல காலமாக சமூகத்தை பிரதிபலித்தும் பிரதிபலிக்கச் செய்தும் வருகிறது. சமூகத்தில் இயங்கி வரும் பெண் பற்றிய கற்பிதங்களை பாதை பிசங்காமல் வெளிப்படுத்தியும் வளர்ச்சி நிலையில் விட்டு போனவற்றை தக்கவைத்தும் வந்திருக்கிறது. ஆண், பெண் என்னும் இரு வேறு படைப்புகளில் பெண்ணுக்கு என விதிக்கப்பட்ட முறைகள் முரண்கள் இரண்டையும் தமிழ் சினிமா விதந்தோதுவது பெண் மீது நிகழ்த்தும் மிகப்பெரிய வன்முறை. இவை தொடர்ந்து திரைப்படங்களில் பதிவு செய்யப்படுகின்றன.*

## பெண்களின் நிலை

*பெண்களுக்கான சமூக சூழ்நிலை காட்டப்படும் இடத்தில் ஆணுக்கு அடிபணிந்த நிலை, ஆணை சார்ந்து வாழும் நிலை, சுதந்திரமின்மை ஆதிக்க வெறிக்கும் சுரண்டலுக்கும் உள்ளாகும் அவலம், பாலுறவு ரீதியாக ஆணின் ஆதிக்கத்திற்கும் மேலாண்மைக்கும் ஆட்பட்டு அடங்கி வெறும் பிள்ளை பேறு எந்திரமாகவும் ,போகப் பொருளாகவும் மட்டும் காட்டப்பட்டு உணர்த்தப்படும் நிலை, உடலமைப்பு காரணமாக பெண் பலவீனமானவள் என்று காட்டப்படும் நிலை ஆகிய தன்மைகளில் காட்டப்படும் இலக்கிய மரபுகளும் இதை மறைத்து மூளை சலவை செய்வதற்காக பெண்ணைப் பற்றிய உயர்ந்த பிம்பங்களும் பெண்களின் முகங்கள் மீது மட்டுமே முழு உடல் அளவிலான கவசங்களும் கூட நம்*

சமூக அமைப்பில் காலம் காலமாக நம்மில் வேண்டுமென்றே திணிக்கப்பட்டவை ஆகும். இந்த நிலை மாறி ஒட்டுமொத்தமாக சுரண்டலையும் ஆதிக்கப் போக்கையும் எதிர்த்து போராடுவதும் மானுடத்தின் முழுமையான மேம்பாட்டிற்காக முனைந்து செயலாற்றும் தீவிரத் தன்மையை இங்கு வேண்டற்பாலது.

**வன்முறை வரையறை விளக்கம்:**

பெண்களுக்கெதிரான வன்முறையை ஆய்ந்த உலக சுகாதார அமைப்பு (கீபிளி), இவ்வன்முறை பெண்களின் வாழ்நாளின் ஐந்து நிலைகளில் நிகழ்த்தப்படுகிறது. இதனை,

1) பிறப்பிற்கு முன்னர்,

2) மழலைப் பருவம்,

3) சிறுமியர்,

4) வளர்சிதை மாற்றம் மற்றும் வயது வந்தோர்

5) முதியோர் எனப் பட்டியல் இடுகிறது உலக சுகாதார அமைப்பு. மேலும், காவல்துறை மற்றும் அதிகார வர்க்கத்தினால் செலுத்தப்படும் வன்முறையானது, கல்லால் அடித்தல் மற்றும் சவுக்கடி ஆகியன. தவிரவும் பெண்களைக் கடத்துதல், கட்டாய விபசாரம் போன்ற பல வன்முறைகள் கட்டமைக்கப்பட்ட குற்றப் பிணையங்களால் நடத்தப்படுகின்றன.

அண்மை ஆண்டுகளில், பன்னாட்டளவில் நெறிமுறைகள், சாற்றுரைகள் போன்றவற்றின் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறைக்குத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐரோப்பிய ஒன்றியம் பாலினத் துன்புறுத்தலுக்கான எதிரான வழிகாட்டுதலையும் வெளியிட்டுள்ளது.

பெண் என்பவள் அடித்தோ, விரட்டியோ, துன்புறுத்தியோ ஆணால் அடக்கியாளப்பட வேண்டியவள் என்பதை, திரைப்படங்களும் தொலைக்காட்சித் தொடர்களும் சொல்லிக் கொடுக்கின்றன. வன்முறைக்கு ஆளாகும் பெண், வீட்டிலோ வெளியிலோ அது குறித்து நம்பிக்கையுடன் பேசுவதில்லை. தன்னுடைய குரல் நிராகரிக்கப்படக்கூடும்; தான் அவமானப்படுத்தப்படக்கூடும்; அதை வைத்து மற்றவர்கள் தவறாக நடக்கக்கூடும் என்கிற காரணங்கள் அதன் பின்னணியில் உள்ளன.

வன்முறை, அச்சுறுத்தல் என்கிற ஆயுதங்கள், பெண்களை அதே இடத்தில் இருத்தி வைக்கின்றன. இந்த ஆயுதங்களை ஏவுகிறவர்கள், ஆண்களாகவே உள்ளனர். இதன் வடிவங்களும் களங்களும் மாறியுள்ளனவே தவிர வன்முறையானது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.அதில் பாலியல் பலாத்காரம் என்பது ஒரு பெண் மீது நிகழ்த்தப்படும் வன்முறையின் உச்சம்.

**பெண்மீதான காவல்துறை அடக்குமுறை :**

காவல்துறையில் மனித தன்மையற்ற தாக்குதலை அதிகார எல்லை மீறலை முன்வைத்து தமிழில் தற்போது படங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்களை அதிலும் பெண்களை காவல்துறை எப்படியெல்லாம் சித்ரவதை செய்கிறது என்பதை அப்பட்டமாக பதிவு செய்கிறது. உண்மையில் நாம் இந்த இடத்தில் சிந்திக்கத் தவறியது ஒரு மனிதன் பெரும் தவறு செய்திருந்தாலும் கூட அவனை விசாரணை என்கிற பெயரில் அடித்து துன்புறுத்த காவல்துறைக்கு எவ்வித உரிமையும் இல்லை. குறிப்பாக பெண்களை முறையின்றி விசாரிக்க கூடாது. காவல்துறை அதிகாரியாக பொறுப்பு ஏற்கும் ஒவ்வொரு காவல்துறை அதிகாரியும் பதவி பிரமாணத்தை ஏற்கும் போது சட்டத்தை காப்பாற்றுவேன் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர். ஆனால் தற்கால சூழ்நிலையில் ஒரு சில அதிகாரிகள் பெண்கள் மீது வன்முறையை புகுத்துகின்றனர் .பெண்கள் மீதான வன்முறை எல்லாத் துறைகளிலும் எல்லா இடங்களிலும் நிகழ்கின்றன. இது தற்கால திரைப்படங்களில் அதிகப்படியாக பெண்கள் மீதான வன்முறையாக காட்சிப்படுத்தப்படுகிறது .பாதுகாப்பாக இருக்க வேண்டிய காவல்துறை அதிகாரிகளே விசாரணை என்ற பெயரில் பெண்களை வன்முறைக்கு உட்படுத்துவது பெருவாரியான திரைப்படங்களில் காணமுடிகிறது.

**ஜெய் பீம் திரைப்படத்தில் பெண்கள்**

ஜெய் பீம் படத்தில் ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த பழங்குடியினரான ராஜா கண்ணு மீது பொய் வழக்குகள் போட்டு விசாரணை என்ற பெயரில் போலீசார் தாக்குகின்றனர். அப்பொய் வழக்கை ஏற்றுக் கொள்ளும்படி துன்புறுத்துகின்றனர். அவன் அதனை ஏற்காத பட்சத்தில பெண்களை அழைத்து வந்து அரை நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்கின்றனர். தவறு செய்தவர்களை கண்மூடித்தனமாக தாக்குவது காவல்துறைக்கு அதிகாரம் இல்லை என்கிற போது தவறு செய்யாத குறிப்பாக பெண்கள் மீது வன்முறையை திணிப்பது காவல்துறையின் உச்சகட்ட வன்முறையின் செயல்பாடு ஆகும். இதே போன்று "பிங்க் என்றொரு படத்தில் ஒரு பெண் வர்ஜின் இல்லை என்றாலும் அவளது சம்மதம் இன்றி அவளை தீண்ட கூடாது என்பதை பதிவு செய்திருந்தது. ஒரு பெண் விருப்பப்பட்டு எத்தனை ஆண் கூடவும் உறவு வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு பெண்ணின் விருப்பம் இன்றி அவளது கணவன் கூட

*அவளை தீண்ட கூடாது என்பதுதான் பாலியல் அறம்"1. இக்கருத்தானது தமிழ் சினிமாவில் சமீப கால திரைப்படமான நேர்கொண்ட பார்வை எனும் திரைப்படத்தில் அஜித் நீதிமன்றத்தில் பெண்களுக்காக வாதாடும்போது இக்கருத்தை முன்வைத்து பேசுவதும் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு மனிதன் உண்மையில் குற்றம் செய்திருந்தால் கூட அவனை "கண் மூடித் தனமாக மனித உரிமைகளை மீறித் தாக்கும் அதிகாரம் காவல்துறைக்கு இல்லை இதனை முன்வைத்து நீதிமன்றங்களில் வாதாடி குற்றவாளி தான் ஆனால் இவனை இவ்வளவு கொடூரமாக தாக்கும் அதிகாரத்தை காவல்துறைக்கு கொடுத்தது யார் என்ற சமூக விசாரணையை மேற்கொள்ளும் படங்கள் தமிழில் இதுவரை வெளியாகவில்லை என்று அருண் மோ அவர்கள் குறிப்பிடுகின்றார்"2.ஆண்களையே இவ்வாறு தண்டிக்கக் கூடாது என்கிற சட்டங்கள் ஒடுக்கப்பட்ட பெண்கள் மீது இழைக்கப்படும் வரைமுறை இல்லா வன்முறையானது அதிகார வர்க்க ஆணாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடாகவே திரைப்படங்களில் காட்சிப்படுத்தப்படுகிறது.*

### விடுதலை பாகம் மி, மிமி திரைப்படங்களில் காவல்துறை அடக்குமுறை

*அரசு துறையில் பெருமளவு எல்லை கடந்த அதிகாரம் கொண்டவர்கள் போலீஸ்காரர்கள். அவர்களிடம் சிக்கிவிட்டால் மனிதனை மனிதக் கண்ணோட்டத்தில் பார்க்க மாட்டார்கள். அவர்களிடம் சிக்கியவர்களை ஒரு வாய் பேச முடியாத பிராணி போல நடத்துவது ஒரு சில காவல்துறை அதிகாரிகளின் நடைமுறை பழக்கம்.*

*"லாக்கப்பில் சிக்கியவர் கர்ப்பிணி பெண்ணாக இருந்தாலும் கத்தோலிக்க மத குருவாக இருந்தாலும் ஒரே விதமான மரியாதை"3. பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவது ஆகும். அவர்களை எதிர்த்து தாக்காத நபர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி தனக்குத்தானே சந்தோஷம் கொள்வது ஒரு மிருகத்தனமான செயல். உண்மையை வரவழைக்க வேண்டும் என்கிற போர்வையில் பெண்கள் மீது காவல்துறை இதுபோன்ற மனித உரிமை மீறல்களை தொடர்ந்து செய்து வருகின்றன. இதை வெளிப்படுத்தும் விதமாகவே வெற்றிமாறன் இயக்கத்தில் தற்போது வெளிவந்த விடுதலை படத்திலும் இடம்பெறுகிறது. மனித உரிமை மீறல்களிலும் காவல்துறையின் அதிகார அத்துமீறல்களிலும் நமது இந்திய நாடு முதலிடத்தில் உள்ளது. இந்த அத்து மீறல்களை வலியும் கண்ணீருமாக பதிவு செய்யும் படமாக விடுதலை திரைப்படம் விளங்குகிறது. விடுதலை திரைப்படத்தில் ஒரு காட்சியில் அரூர் பகுதியில் ரயில் தண்டவாளம் வெடிவைத்து தகர்க்கப்பட்டு பலர் இறக்கிறார்கள். மக்கள் படை என்ற தீவிர அமைப்பு தான் இதற்கு காரணம் என்று அரசு முடிவு செய்து இந்த அமைப்பின் தலைவர் வாத்தியார் என்ற (விஜய் சேதுபதி) பெருமாளை பிடிக்க முடிவு செய்து மலைப்பகுதியில் காவல்துறை அதிரடிப் படை முகாம் அமைக்கிறது. இந்த முகாமில் வேன் டிரைவராக வந்து சேர்கிறார் குமரேசன் (சூரி). காவல்துறை அதிகாரியான குமரேசன் அந்த மக்கள் மீது அவர் காட்டும் அன்பும் அக்கறையும் காவல்துறை மீதும் காவல்துறை அதிகாரிகள் மீதும் நன்மதிப்பை ஏற்படுத்தும் அதே நேரத்தில் மக்கள் படை தலைவனான வாத்தியாரை (விஜய் சேதுபதி) பிடிக்க காவல்துறை ஊர் மக்களை மோசமாக அடித்து துன்புறுத்துவதும் பெண்கள் என்றால் அதிலும் குறிப்பாக பழங்குடி பெண்கள், ஒடுக்கப்பட்ட பெண்கள் என்றால் எதிர்த்து பேச மாட்டார்கள் அவர்களை என்ன வேணாலும் செய்யலாம் என்ற அதிகார வர்க்க ஆணாதிக்கச் சிந்தனை பெண்களை நிர்வாணப்படுத்தி விசாரணை என்ற பெயரில் வன்முறையை புகுத்துவதைப் பார்க்கும்போது பெண்களுக்கான சுதந்திரம் இன்னும் முழுமையாக கிடைக்கவில்லை என்றே இக்காட்சியின் மூலம் உணரமுடிகிறது. காவல்துறை என்ற அமைப்பும் செயல்பாடுகளும் ஆங்கிலேயர்கள் நம் மக்களை அடக்கி ஆள உருவாக்கிய ஒன்றுதான் என்ற கருத்து இங்கே உண்டு. இந்த கருத்தை அப்படியே உணர்த்துவது போல உள்ளது விடுதலை திரைப்படம்.*

### நெஞ்சுக்கு நீதி திரைப்படத்தில் குழந்தைகள் மீதான வன்முறை:

*அடித்தள மக்களின் வலிகளையும் வேதனைகளையும் இரத்தக் கறைகளையும் தத்ரூபமாக படம் பிடித்து காட்டுகிறது நெஞ்சுக்கு நீதி திரைப்படம். அதிகார வர்க்கமும் ,ஆதிக்க வர்க்கமும் அடித்தள பெண் குழந்தைகள் மீது ஏவப்படும் வன்முறையானது சாப்பாட்டில் தீட்டு, கோவிலில் தீட்டு என்றெல்லாம் குறலிடும் மேட்டுக்குடிகள் அடித்தள பெண் குழந்தைகளை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தும் போது மட்டும் தீட்டப் பார்ப்பதில்லை. இத்திரைப்படத்தில் ஒரு தொழிற்சாலையில் பணிபுரியும் மூன்று சிறுமிகள் 30 ரூபாய் கூலி உயர்த்தி கேட்கிறார்கள் அதனை பொறுக்க முடியாது ஆதிக்கச் சாதியை சேர்ந்த முதலாளி தன்னோடு இரண்டு போலீஸ் அதிகாரிகளையும் சேர்த்துக்கொண்டு கொடூரமான முறையில் அச்சிறுமிகளை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துகின்றனர். ஒரு பெண் அதிகார வர்க்கத்திடம் தனக்கான உரிமையை குரலை உயர்த்தியோ அல்லது தாழ்த்தியோ கேட்கும் போது அவர்கள் மீது ஏவப்படும் முதல் வன்முறை பாலியல் ஆகும். இத்தகைய நிலைப்பாடுதான் சமூக அமைப்பில் மேலோங்கி காணப்படுகின்றது.*

### காலா திரைப்படத்தில் வன்முறை

*மும்பையின் மிகப்பெரிய குடிசை பகுதியான தாராவியில் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அந்த குடிசைப் பகுதியை கையகப்படுத்தி மிகப்பெரிய கட்டுமான திட்டத்தை அமல்படுத்தும்*

அரசியல்வாதியை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் அப்பகுதி மக்கள். இந்தியாவில் மிகப்பெரிய பிரச்சனையாக உருவெடுத்து வரும் நகர்ப்புற நில உடமை குறித்த கதையை ஒடுக்கப்பட்ட மக்களின் பின்னணியில் பா.இரஞ்சித் உருவாக்கியப் படம் காலா.ஒடுக்கப்பட்டவர்களிடம் இருக்கும் சிறு துண்டு நிலத்தையும் அதிகாரத்தில் இருப்பவர்கள் பறிப்பதும் அதை எதிர்த்து ஒடுக்கப்பட்டவர்கள் போராடிக் கொண்டே இருப்பதும் வழக்கமாகி விட்டது. இப்படத்தின் இறுதிக் காட்சியில் நிலம் எங்களது உரிமை என்று போராடிய மராட்டிய பெண் மீது காவல்துறை அத்து மீறிய பாலியல் வன்முறைக்கு உட்படுத்துகிறது.இருப்பினும் அப்பெண் பயப்படாமல் தன்னை தாக்கிய அதிகாரியை எதிர்த்து தாக்குகின்றாள். ஆரம்பகால திரைப்படத்தில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆட்படும்போது அதை அவமானமாகக் கருதினர்.தற்கால திரைப்படத்தில் ஆணாதிக்கத்தையும், அதிகார வர்க்கத்தையும் எதிர்த்தப் போராடக்கூடியவர்களாக காட்சிப்படுத்தவது வரவேற்கத்தக்கதாகும்.

**முடிவுரை**

திரைப்படம் என்பது உறவுகள் அல்லது நண்பர்களைப் போல நம்மை ஆற்றுப்படுத்தும் , மகிழ்விக்கும் மேம்படுத்தும் பெரியளவிலான வேலைப்பாடுகளைச் செய்யக்கூடிய அற்புதமான கலை. ஆனால் அது கலையாக இல்லாமல் பொழுதுபோக்குக்காக மட்டும் செயல்படாமல் அறத்தை வலியுறுத்துவதாகவும், அவலத்தை பேசக்கூடியதாகவும் இருக்க வேண்டும். மேலே சுட்டிக்காட்டப்பட்ட அனைத்து திரைப்படங்களும் ஒடுக்கப்பட்ட மக்களின் வலிகளையும் வாழ்வியலையும் எதார்த்தத்தோடு காட்சிப்படுத்துகிறது. குறிப்பாக ஜெய் பீம் திரைப்படத்தில் பழங்குடி இன பெண்ணுக்கு நிகழ்த்தப்பட்ட காவல்துறை அத்துமீறலுக்கு எதிராக தனி பெண்ணாக நின்று போராடி வெற்றி பெறும் தன்மையை இப்படம் பதிவு செய்திருக்கிறது.மேலும் தற்கால தமிழ் திரைப்படங்கள் ஒடுக்கு முறைக்கு எதிராக போராடவும் மக்களை விழிப்புணர்வு செய்யும் நோக்கோடு திரைக்கதை உருவாக்கப்படுகிறது அந்த வகையில் மேற்கண்ட திரைப்படங்கள் அனைத்தும் சாமானியர்களின் உரிமைகளை, வலிகளை எடுத்துரைக்கிறது.

**துணைநூற்பட்டியல்**


1. அருண்.மோ ,சினிமா எனும் கலை ,பேசாமொழி பதிப்பகம், 2023 (பக்–228)

2. மேலது (பக்–228)

3. வசந்த பாரதி, இருள்வெளியில் புலப்படும் சலனம், தட்டான் பதிப்பகம், 2024 (பக்–19).